28/1/18 pg-no.3 Dinamani

# மாணவர்கள் அரசியலுக்கு வர வேண்டும்




சென்னை மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் 'மாற்றம்' தொண்டு நிறுவனம் சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்ற நடிகர் கமல்ஹாசன். உடன் மாற்றம் தொண்டு நிறுவன நிறுவனர் சுஜித்குமார், இணை நிறுவனர் வி.உதயசங்கர், ஆலோசகர் சிவா, சாய்ராம் கல்விக் குழும செயல் அதிகாரி சாய்பிரகாஷ் முத்து.

**தாம்பரம், ஜன. 27:** தமிழகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த மாணவர்கள் அரசியலுக்கு அவசியம் வர வேண்டும் என்று நடிகர் கமல்ஹாசன் அழைப்பு விடுத்தார்.

'மாற்றம்' தொண்டு நிறுவனம் சார்பில், சென்னை மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் சங்கமம் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியது:

நாட்டில் இன்றைய நிலைக்குக் காரணம் உங்களைப் (மாணவர்கள்) போன்றவர்கள் ஒதுங்கி இருப்பது தான். நாட்டைப் பற்றி கவலைப்பட்டால் மட்டும் பயனில்லை. நாம் ஏதா

## கமல் அழைப்பு

வது செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். அரசியலுக்கு நீங்கள் வர வேண்டும். மக்களுக்கு நல்லது செய்யும் அரசியலை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். கல்வி பயிலும் நீங்கள் நாட்டு நடப்பைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். வாக்குரிமையை நீங்கள் சரியாக பயன்படுத்த வேண்டும்.

மக்களின் வறுமையைப் போக்குவதாக சொல்லி அரசியலுக்கு வந்தவர்கள், அவர்களது வறுமையைப்போக்கி, கொள்ளையடித்து சுவிட்சர்லாந்து வங்கிகளில் பணம் சேர்க்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டார்கள்.

அரசு பொறுப்புடன் செய்ய வேண்டிய கல்வி, சுகாதாரம் ஆகிய பணிகளை தன்னார்வமுள்ள தனியார் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அரசோ அதைப் பற்றியெல்லாம் அக்கறை இல்லாமல், மது விற்றுக் கொண்டு இருக்கிறது என்றார் கமலஹாசன்.

இந்நிகழ்ச்சியில் மாற்றம் தொண்டு நிறுவன நிறுவனர் சுஜித்குமார், இணை நிறுவனர் வி.உதயசங்கர், ஆலோசகர் சிவா, சாய்ராம் கல்விக் குழும செயல் அதிகாரி சாய்பிரகாஷ் முத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.